


# கல்லூரிக் கீதம்

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-ஆதி

## பல்லவி

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் -உவந்துதலை
தாழ்த்திப் பணிந்து தெழுவோம் -யூனியன் தாயை –வாழ்

## அநுபல்லவி

தெல்லிமணிநகர்க்கோர் திலகமெனத் -திகழ்ந்து
செல்வங் கொழிக்குங் கலைக் கோயிற் பணிபுரிந்து –வாழ்

## சரணம்

ஆதிபகவன் வழி அறிவுச் சுடர்விரித்தே
நீதி நெறியில் நெஞ்ச நிறைவுக் கருளளித்து
சாதி சமய இன சமரச ஞான மொளிர்
சோதி சுடரி லீசன் சுருதிப் பொருளுணர்ந்தே –வாழ்

வாழ்வுக் கிலக்கணமாய் வளர்ச்சிக் கிலக்கணமாய்
ஆழ்கடல் லுக்குயிரை அர்ப்பணித் திங்குயிர்த்தே
சூழியருள் கொய்தேயன்று சுடரொளி ஏத்த வந்த
ஊளிய ருள்ளமென உயர்ந்த தன்னை வாழ்கவென்றே –வாழ்

அன்பின் வழியறிந்தும் அறனின் திறமுனர்ந்தும்
பண்பின் பண்ணறிந்தும் பாலித் தளித்து நின்றே
இன்ப நினைவலைகள் இதயத் தெலிக்க வென்று
நட்புக் கினிய தாயை நாடியணைத்து நின்றே –வாழ்

இயற்றியவர்-கவிஞர் அம்பி

உருவாக்கம்- யாழ் யூனியன் கல்லூரி இனையத்தள குழு
தொடர்புகளுக்கு- info@junioncollege.com